# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம்

---

*[1983, திசெம்பர் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983 திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 60*

## 1983 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம்

*[1983, திசெம்பர் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச. வ.—ஓ. 25/83*
*1581*

### *பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**420 ஆம் அத்தியாயத்தில் 33அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

2. பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் கட்டளைச்சட்டமானது, அக்கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன், இப்புதிய பிரிவானது அக்கட்டளைச் சட்டத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் கடன் நிதியத்துக்கு உதவுதொகை எதுவும் செலுத்தப்படுதலாகாதென அமைச்சர் வெளிப்படுத்துகையைச் செய்தல்.

33அ. (1) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் அல்லது இக்கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட ஏதேனும் கட்டளையின் நியதிகள் எது எவ்வாறிருப்பினும், அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள ஏதேனும் கடன் தொடர்பில் கடன் நிதியத்துக்கு அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் உதவுதொகை எதுவும் செலுத்தப்படுதலாகாதென தேசிய பொருளாதார நலன்கருதி வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்படுகின்றவிடத்து, முதிர்வடையும் தனிசு எதனையும் மீட்பதற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.".

ஏ— 073340—2,875 (12/83)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியிட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.